கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வள்ளியூர்

அ.வ.எண்.1/2019

நாள்.03.11.2025

பி.வா.சா.1 – அன்பரசி
க/பெ – சுயம்பு

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1) நான் என்னுடைய தகப்பனார் புகைபடம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. என் தந்தை இறுதி சடங்கில் எத்தனை பேர் கலந்து கொண்டார்கள் என்றால் கூட்டமாக உறவினர்கள் கலந்து கொண்டனர். எங்கள் ஊரில் உள்ள நபர்கள் அனைவரும் இறுதி சடங்கில் கலந்து கொண்டார்களா என்றால் கலந்து கொண்டார்கள். கலந்து கொண்டவர்கள் யார் யார் என்று தனியான கவனிக்கவில்லை என்றால் சரிதான். என் தந்தையின் இறுதி சடங்கில் மையில்ராஜன் மற்றும் அவருடைய தாயார் கலந்து கொண்டார்கள் என்றால் அவர்கள் வரவில்லை. மேற்படி மையில்ராஜன் என் தந்தையின் சொத்துக்களை பொறுத்து உரிமை கோரவில்லை என்றால் இது வரை உரிமை கோரவில்லை.

2) மேற்படி சுப்பம்மாளின் தந்தை பெயர் தெரியுமா என்றால் தெரியாது. இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையை நான் படித்து பார்த்துள்ளேனா என்றால் எனக்கு படிக்க தெரியாது, எனது மகன் படித்து சொன்னான். எனது தகப்பனாரின் வாரிசு சான்றிதழ் வேண்டி யார் விண்ணப்பித்தோம் என்றால் நானும், எனது சகோதரர்களும்



MITHUNA A KAISER
Digitally signed by MITHUNA A KAISER
Date: 2025.11.03 18:17:21 +0530

விண்ணப்பித்தோம். பொன்னார்குளம் எந்த கிராமத்திற்கு உட்பட்டது என்றால் இருக்கன்துறை கிராமத்திற்கு உட்பட்டது. வாரிசு சான்றிதழ் சம்மந்தமாக கிராம நிர்வாக அலுவலர் ஊரில் விசாரித்தாரா என்றால் விசாரித்து தான் சான்றிதழ் வழங்கி உள்ளார். கிராம நிர்வாக அலுவலர் யாரை விசாரித்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி வாரிசு சான்றிதழ் சம்மந்தமாக நான் யாரையும் கிராம நிர்வாக அலுவலரிடம் அழைத்து சென்றேனா என்றால் யாரையும் அழைத்து செல்லவில்லை.

3) என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.7 வாரிசு சான்றிதழ் ஆனது யாரையும் விசாரிக்காமல் வழங்கப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி பி.வா.சா.ஆ.7 யாரையும் விசாரிக்காமல் வழங்கப்பட்ட வாரிசு சான்றிதழ் என்பதால் மேற்படி ஆவணம் செல்லத்தக்க ஆவணம் அல்ல என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.3 அடமான ஆவணம் மற்றும் பி.வா.சா.ஆ.4 அடமானம் செல்லடித்த ஆவணம் ஆகிய இரண்டும் இவ்வழக்கிற்கு சம்மந்தமில்லாத ஆவணங்கள் என்றால் சரியல்ல. மேற்படி இரண்டு ஆவணங்களும் ஆறுமுக நாடாரின் வாரிசுகள் என்பதை காட்டகூடிய ஆவணங்கள் இல்லை என்றால் சரியல்ல. வாதி மையில்ராஜனுக்கு எத்தனை குழந்தைகள் என்றால் ஒரு குழந்தை. மையில்ராஜனின் மகளுக்கு பூப்புனித நீராட்டு விழா நடத்தினார் என்றால் சரிதான். மேற்படி பூப்புனித நீராட்டு விழா அழைப்பிதழில் மையில்ராஜனின் தகப்பனார் பெயர் ஆறுமுக நாடார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அவர் கூறிய பெயர் தான் குறிப்பிடப்பட்டிருக்கும் என்ன பெயர் குறிப்பிடப்பட்டிருந்தது என்று எனக்கு தெரியாது.



MITHUNA A KAISER
Digitally signed by MITHUNA A KAISER
Date: 2025.11.03 18:17:26 +0530

4) எனது தாயாரின் இறுதி சடங்கிலும் மையில்ராஜன் மற்றும் அவரது தாயார் சுப்பம்மாளும் கலந்து கொண்டார்கள் என்றால் சரியல்ல. எனது தந்தை ஆறுமுகநாடார் அருகில் உள்ள சுப்பம்மாள் வீட்டிற்கு அடிக்கடி சென்று வந்தார் என்றால் சரியல்ல. எனது தந்தையான ஆறுமுக நாடார் மையில்ராஜனுக்கு தந்தை ஸ்தானத்திலிருந்து செய்யவேண்டிய கடமைகளை செய்து வந்ததால் வாதி மையில்ராஜன் எங்களது வீட்டிற்கு வரவில்லை என்றால் சரியல்ல. எங்களது ஊரில் எனது தந்தை ஆறுமுக நாடார் மையில்ராஜன், நான் அனைவரும் ஒன்றாக தான் சேர்ந்து இருந்தோம் என்றால் சரியல்ல.

5) எனது தந்தை புற்றுநோயால் பாதிக்கப்பட்டிருந்தபோது வாதி மையில்ராஜன் எனது தந்தையை பார்த்து கொண்டார் என்றால் சரியல்ல, அது பொய்யாகும். வாதி மையில்ராஜன் என்னுடைய தம்பி என ஒத்து கொண்டால் எனது தந்தையின் சொத்துக்களில் பங்கு கொடுக்கவேண்டியது வரும் என்ற எண்ணத்தில் மையில்ராஜன் எனது தம்பி இல்லை என அபான்டமான பொய் கூறுகிறேன் என்றால் சரியல்ல. வாதி மையில்ராஜன் எங்களிடமிருந்து சொத்துக்கள் ஏதும் கேட்கவில்லை அவரின் தந்தை ஆறுமுக நாடார் என விளம்புகை மட்டும்தான் கோருகிறார் என்றால் அவர் யார் என்றே தெரியாது. நான் எனது தந்தையின் புகைப்படத்தை நீதிமன்றத்திற்கு கொண்டு வந்தால் வாதி யார் என்பதை நீதிமன்றத்திற்கு நிரூபித்து விடலாம் என்றால் என்னிடம் என் தந்தையின் புகைப்படம் கிடையாது. நான் என் தந்தையின் புகைபடத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் மையில்ராஜனின் தந்தை ஆறுமுக



MITHUNA A KAISER
Digitally signed by MITHUNA A KAISER
Date: 2025.11.03 18:17:31 +0530

நாடார் என்பது தெரிந்துவிடும் என்பதால் வேண்டுமென்றே புகைபடம் இல்லை என பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் தந்தையின் இறுதி சடங்கில் மையில்ராஜன் மற்றும் அவர் தாயார் சுப்பம்மாள் கலந்து கொள்ளவில்லை என பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி மற்றொரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

MITHUNA A KAISER

Digitally signed by MITHUNA A KAISER
Date: 2025.11.03 18:17:36 +0530